**பாததும்பர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்நிதிக்கூற்றுகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2018 ஜுலை 10 திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாததும்பர பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபளிக்கிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்படாத 4 கருத்திட்டங்களின் பெறுமதி ரூபா 3,013,930 மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன், கஹல்ல பொது புத்தகசாலை அபிவிருத்திற்காக மேற்கொள்ளப்படிருந்த ரூபா 148,336 ஆன பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. 3 கருத்திட்டங்களில் காணி கட்டிடங்கள் அபிவிருத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த உன்மையான பெறுமதியை விட கூடுதலாக ரூபா 283,990 மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 2,098,375 பெறுமதியான வேலை கடன்கொடுத்தோர் 6 மீதிகள் மற்றும் ரூபா 844,002 பெறுமதியான 3 வேலை கடன்பட்டோர் இரண்டு முறை கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு 2016 திசெம்பர் மாத தவணை கொடுப்பனவு இரண்டு முறை கணக்கிடப்பட்டதன் காரணத்தால் தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தி கணக்கின் மீதி மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் கணக்கின் மீதி ரூபா 263,226 குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) நானாவித கடன்கொடுத்தோருக்காக வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 31,485 நானாவித வைப்பு கணக்கிற்கு வரவு வைத்ததன் காரணத்தால் நானாவித கடன்கொடுத்தோர் மீதி அப் பெறுமானத்தால் கூடுதலாக மற்றும் நானாவித வைப்பு கணக்கில் மீதி அப் பெறுமானத்தால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்காக 2016 ஆண்டில் கிடைத்திருந்த அனுமதிபத்திர கட்டணம் ரூபா 25,000 யை 2017 ஆண்டு அனுமதிபத்திர கட்டணக் கணக்கிற்கு செலவு வைக்காது வரவு வைத்ததன் காரணமாக 2017 ஆண்டிற்கான அனுமதிபத்திர கட்டணம் ரூபா 50,000 குறைத்து மற்றும் முன்னர் கிடைத்த வருமானம் அப் பெறுமானத்தால் கூடுதலாகவும் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஊ) 2018 ஆண்டுக்காக 2017 ஆண்டின் கிடைத்திருந்த அனுமதிபத்திர கட்டணம் ரூபா 34,000 முன்னர் கிடைத்த வருமானமாக செலவு வைக்கப்படாமல் வரவு வைத்ததன் காரணத்தால் முன்னர் பெற்ற வருமானக் கணக்கின் மீதி ரூபா 68,000 குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(எ) 2018 ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 761,968 வீத வரி கட்டணம் முன்னர் கிடைத்த வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சேமிப்பு கணக்கு மீதி ரூபா 1,246,730 ஆன போதும், அது ரூபா 1,134,892 ஆக கணக்கிடப்பட்டதனால் ரூபா 111,838 குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 53,040 பெறுமதியான தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்கு பல்வேறு வைப்பு மீதி ரூபா 5,658,911 ஆன போதும், அது ரூபா 5,800,992 ஆக கணக்கிடப்பட்டதன் காரணத்தால் ரூபா 142,081 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டிக்கான நீதிமன்ற தண்டப்பண பில்லிடல் ரூபா 625,428 ஆன போதும், முன்னைய ஆண்டிற்கான பில்லிடல் ரூபா 1,196,050 உடன் ரூபா 1,821,478 கணக்கிடப்பட்டிருந்தன.

(ஔ) சபைக்கு சொந்தமான ரூபா 300,000 பெறுமதியான எக்ஸ்கவேடர் இயந்திரம் மோட்டார் வண்டி மற்றும் மாட்டு வண்டி கணக்கில் மற்றும் இயந்திர உபகரண கணக்கிலும் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், பாதை அழுத்தியின் பெறுமதியை இனங்கண்டு கணக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) குண்டசாலை மற்றும் பாததும்பர பிரதேச சபை இரண்டும் இணைந்து நடைமுறைப்படுத்தும் அலுத்வத்த கழிவு பொருள் முகாமை கருத்திட்டத்தின் இலாபம் அல்லது நட்டத்தை கணக்கிட நடவடிக்கை எடுக்கப்ட்டிருக்கவில்லை.

### 1.3.2 **எதிர்பாராத பொறுப்புகள்**

பாதை விரிவாக்கல், மதில் உடைத்தல், அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுதல் மற்றும் கால்வாய்களை இடையூரு செய்தல் தொடர்பாக 19 நபர்களினால் சபையிற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்த போதும், கணக்கு குறிப்புகள் மூலம் காட்டப்படவில்லை.

### 1.3.3 **இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 61,841,767 ஆன 9 கணக்கு விடயங்களில் மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிற்கிடையில் ரூபா 19,325,796 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

#### (அ) **பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய 6 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 43,668,851 ஆனது. அது தொடர்பான கால பகுப்பாய்வின் பிரகாரம் 1-5 ஆண்டுகள் வரையான காலத்திற்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 18,235,985 ஆக இருந்தன.

#### (ஆ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய 4 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 50,937,302 ஆனதுடன், அது தொடர்பாக கால பகுப்பாய்வின் பிரகாரம் அவற்றின் ஓராண்டு காலத்தை விஞ்சிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 29,916,977 ஆனது.

### 1.3.5 **கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 120,688,644 ஆன 04 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தன.

2. **நிதி மீளாய்வு**

2.1 **நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 11,949,326 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 11,993,024 ஆனது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை |
| ------------------ | ------------------ | ---------------- | ---------------- | ---------------- | ---------------- | ---------------- | ---------------- | ---------------- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் குத்தகை வாடகை | 9,438,000 | 8,796,768 | 7,573,344 | 1,223,424 | 8,212,500 | 8,300,956 | 8,269,780 | 31,176 |
| | | | | | | | | |
| வாடகை | 2,401,640 | 1,712,502 | 1,546,629 | 165,873 | 2,996,800 | 1,232,840 | 1,081,837 | 151,003 |
| | | | | | | | | |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 774,500 | 774,500 | 706,320 | 68,180 | 1,150,500 | 1,150,500 | 929,410 | 221,090 |
| | | | | | | | | |
| ஏனைய வருமானம் | 29,716,800 | 29,600,278 | 20,770,759 | 8,829,519 | 28,534,500 | 28,719,384 | 24,660,637 | 4,058,747 |
| | ---------------- | ---------------- | ---------------- | ---------------- | ---------------- | ---------------- | ---------------- | ---------------- |
| | 42,330,940 | 40,884,048 | 30,597,052 | 10,286,996 | 40,894,300 | 39,403,680 | 34,941,664 | 4,462,016 |
| | ========= | ======= | ======== | ======== | ========= | ========= | ======== | ======== |

**2.2.2 வீத வரி மற்றும் வாடகை**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 3,554,842 ஆன நிலுவை மீதி ஒன்று நிலவியதுடன், ஆண்டினுன் பில்லிடல் ரூபா 5,580,000 ஆனது. ஆண்டினுள் அறவிடல் நிலுவை மீதியின் ரூபா 1,433,214 தொகை மற்றும் ஆண்டினுள் பில்லிடலில் ரூபா 3,170,335 ஆனது. 2017 திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை மீதி ரூபா 4,531,292 ஆனதுடன், அம் மீதியில் ஓர் ஆண்டை விஞ்சியிருந்த மீதிகளின் பெறுமதி ரூபா 2,121,628 ஆனது.

**2.2.3 குத்தகை வாடகை**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் இருந்த ரூபா 388,071 ஆன நிலுவை மீதியிலிருந்து ஆண்டின் போது ரூபா 71,790 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. அது நிலுவையின் 18.5 சதவீதமான மிகக் குறைந்த அளவாகும்.

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,821,478 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 27,641,330 ஆனது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் பொது நலன், வசதிகள் மற்றும் நலன் புரி போன்ற சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

**(அ) துணைச் சட்டம்**

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான நடவடிக்கைகளை மேற்கொள்ள துணைச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டிய போதும் 2017 திசெம்பர் 31 திகதி வரையும் 18 விடயங்களிற்கு மாத்திரம் துணைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) செயல் நடவடிக்கை திட்டம்**

அமுல்படுத்தப்பட்ட துணைச் சட்டத்தின் படி சபை மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த 10 செயற்பாடுகளிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) எதிர்பார்த்த விளைவுகளை (out come) பெற்றுக் கொள்ளாமை**

செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த வேலையொன்றை செய்வதற்காக ரூபா 1,980,000 செலவிடப்பட்டு எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை (Out put) பெற்றுக் கொண்டிருந்த போதும், எதிர்பார்த்த விளைவுகளை (out come) பெற்றுக் கொண்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு.

| செயற்பாடு | 2017 திசெம்பர் 31 திகதி வரை செலவிடப்பட்ட தொகை | அவதானங்கள் |
|---|---|---|
| | ரூபா | |
| குடுகல வியாபார கட்டிடத் தொகுதி | 1,980,000 | இவ் வியாபார கட்டிடத் தொகுதியின் இரண்டு கடையறைகள் 2014 திசெம்பர் மாதம் முதல் இது வரை பயன்படுத்தாமல் பயனற்றதாக நிலவின. |

**(ஈ) அமுல்படுத்தப்படாத செயற்பாடுகள்**

மீளாய்வாண்டில் ரூபா 300,000 பெறுமதியான 4 கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை.

| செயற்பாடு | மதிப்பிடப்பட்ட கிரயம் | அவதானங்கள் |
|---|---|---|
| | ரூபா | |
| மகசெலே கொலனியில் இருந்து தொரகமுவ கிராம எல்லை வரை உள்ள கிராம சபை பாதயின் கீழ் | 100,000 | வேலைகளை நிறைவேற்றுவதற்காக தகுதியான ஒப்பந்தக்காரர் |

| | | |
|---|---|---|
| பகுதியை அபிவிருத்தி செய்தல். | | ஒருவர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்று முன்வராமை. |
| கலதெனிய ஹகீமியா பள்ளிக்கூட குறுக்குவழி அபிவிருத்தி செய்தல் | 150,000 | - மேற்படி - |
| கஹல்ல இஹல கம்மெத்த குறுக்குவழியில் இடப்பட்டுள்ள மதகினால் வரும் நீர்ஓட்டத்திற்காக வயல் காணி வரை பக்க கால்வாய் நிர்மாணித்தல். | 50,000 | - மேற்படி - |

**(உ) செயற்பாடுகளை மேற்கொள்வதன் தாமதம்**

----------------------------------------------------------------

பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்பாடு | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | 2017 திசெம்பர் 31 திகதிக்கு செலவு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| மீகம்மன பன்சலதென்ன பாதை அபிவிருத்தி செய்தல். | 300,000 | 2017.12.28 | - | மழையுடன் கூடிய கால நிலையினால் தாமதமாகியிருந்தது. |
| பிரதேச சபைக்கு சொந்தமான மடவல பழைய இறைச்சிக் கடையுள்ள கட்டிடத்தை அபிவிருத்தி செய்தல். | 400,000 | 2017.12.27 | - | 2018 ஏப்ரல் 20 ஆம் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. |
| உடதலவின்ன பல்லேதலவின்ன பிரதான பாதையை அபிவிருத்தி செய்தல் | 500,000 | 2017.12.27 | - | 2018 ஜுன் 11 ஆம் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. |
| மடவல கடைவீதி ஹபுகஸ்தென்ன குறுக்குவழியை அபிவிருத்தி செய்தல் | 200,000 | 2017.12.22 | - | மழையுடன் கூடிய கால நிலையினால் தாமதமாகியிருந்தது. |
| மடவல கடைவீதி கல்கெட்டியாவத்த குறுக்குவழி அபிவிருத்தி செய்தல் | 250,000 | 2017.12.22 | - | மழையுடன் கூடிய கால நிலையினால் தாமதமாகியிருந்தது. |

(எ) **கழிவுப் பொருள் முகாமை**

----------------------------------------------

சபை அதிகார எல்லையினுள் தினத்தோறும் ஒன்று சேறும் 2 டொன் அளவான கழிவுப் பொருற்களை சபையின் ஊழியர் மற்றும் டெக்டர் வண்டியை பயன்படுத்தி துறுப்பிடிக்கும் மற்றும் துறுப்பிடிக்காததென வேறுபடுத்தி குண்டசாலை கழிவு பொருள் கருத்திட்டத்திற்கு அனுப்பப்பட்டிருந்தன.

(ஒ) **நிலையான அபிவிருத்தி இலக்கு**

சபையினால் நிலையான அபிவிருத்தி நோக்கின் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிக்கவில்லை.

3.2 **முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) பிரதேச சபைக்கு சொந்தமான அம்பதென்ன 6 கடையறைகள் மற்றும் பல்லேதலவின்ன 4 கடையறைகள் குறுகிய காலத்திற்கு (3வருடங்களுக்காக) குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும், ஒவ்வொறு 3 வருடங்களுக்கு ஒரு முறை மீண்டும் ஒரே குத்தகைக்காரருக்கே குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், இதற்காக ஒரே தடவையில் செலுத்தும் பணம் அறவிடப்படாததனால் சபைக்கு வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) அலுத்வத்த கழிவு பொருள் நிலையம் பாததும்பர மற்றும் குண்டசாலை பிரதேச சபை இரண்டினையும் இனைத்து சம அளவு வருமானம் மற்றும் செலவுகளை பகிர்ந்து கொள்வதற்கு உடன்பட்டிருந்தது. அவ்வாராயினும், மீளாய்வாண்டில் பாததும்பர பிரதேச சபையினால் ரூபா 7,047,210 அளவான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் எவ்வித வருமானமும் கிடைத்திருக்கவில்லை. பொறுப்புவாய்ந்த அலுவலர்களால் இந்த கருத்திட்டம் முறையாக செயற்படுத்தப்பட்டு வருமானம் மற்றும் செலவுகளை முறையாக பகிர்ந்து கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் கிடைத்திருந்த ரூபா 2,387,194 ஆன தொகை உரிய வேலைக்கு பயன்படுத்தாது 2 வருடங்களுக்கு அதிகமான காலம் பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கபப்ட்டிருந்தது.

**3.3 மனித வள முகாமை**

**ஊழியர் வெற்றிடம்**

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாரான ஆளணிக்கிடையில் 21 ஊழியர் வெற்றிடங்கள் நிலவின.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்தாமை**

மடவல நகரத்தில் உள்ள பிரதேச சபைக்கு சொந்தமான பர்சஸ் 10.9 ஆன காணியின் பர்சஸ் 5.26 ஆன அளவு அறுகாமையில் பக்கத்து வதிவாலர்களால் அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்ததுடன், அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இக் காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 03 கடையறைகள் 10 வருடங்களுக்கு அதிக காலமாக மூடப்பட்டிருந்தன.

**3.4.2 சொத்துக்களின் பெறவேண்டிய வருமானம் பெற்றுக்கொள்ளாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்லேதலவின்ன வியாபார கட்டிடத் தொகுதியில் 01 ஆம் இலக்க கடையறை நீண்ட காலமாக முத்திரையிடப்பட்டு மூடப்பட்டிருந்ததுடன், முன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மடவல வியாபார கட்டிடத் தொகுதி கீழ் மாடியில் 10 கடையறைகள் எவ்வித பயன்பாடுமின்றி மூடப்பட்டிருந்தன.

(இ) சபைக்கு சொந்தமான ரூபா 16,695,000 பெறுமதியான பெகோ இயந்திரத்தினால் வருமானம் ஈட்டிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

குடுகல வியாபார கட்டிடத் தொகுதி அமைந்துள்ள 50 பர்சஸ் அளவான காணி சபையினால் சுவீகரிக்கப்ட்டிருக்கவில்லை.

**3.4.4 விளைவற்ற/குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

(அ) சபைக்கு சொந்தமான ரூபா 4,260,000 பெறுமதியான 4 வாகனங்கள் 5-10 வரை காலத்திலிருந்து விளைவற்றதாக நிலவியதுடன், அவ் வாகனங்களை சீரான நிலைக்கு கொண்டுவர அல்லது பராதீனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,295,854 பெறுமதியான நீர் உபகரண இருப்பொன்று நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் இருந்தன.

3.5 **பெறுகை**

**3.5.1 பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டினுள் சபைனால் ரூபா 1,046,045 ஆன பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும், பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்ட்டிருக்கவில்லை.

**3.5.2 வழங்கள் மற்றும் சேவைகள்**

பெறுகை வழிகாட்டி கோவையின் 6:2:2 பிரகாரம் விலை மணு கோரப்படாமல் ரூபா 46,000 பெறுமதியான விரல் அடையால இயந்திரமொன்று கெள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**3.5.3 ஒப்பந்த நிருவாகம்**

2017 ஆண்டில் பொது நிதியத்தின் கீழ் இஹல யடவர சுமக பாலர் பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்காக 2 கட்டங்களின் கீழ் ரூபா 975,000 ஆன தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதில் இரண்டாம் கட்டத்தின் கீழ் ரூபா 600,000 ஆன நிர்மாணத்திற்காக 2017 செப்தெம்பர் 11 திகதி உதார சமுதாய அபிவிருத்தி சங்கத்துடன் உடன்பட்டிருந்தது. 2018 ஏப்ரில் 19 திகதி இந்த நிர்மாணத்தின் பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இந்த நிர்மாணம் 3 மாதத்தினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும், 2018 ஏப்ரல் 19 ஆம் திகதி வரையும் வேலை பூர்த்தி செய்யப்படவில்லை. ஒப்பந்த காலத்தை விட 4 மாதங்கள் தாமதித்துள்ளதுடன், அது தொடர்பாக ஒப்பந்தத்தின் 4 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) கட்டிடத்தில் இரண்டு மூடிகளுடன் கூடிய கண்ணாடி இடப்பட்ட அலுமினியம் யன்னள்களுக்கு இடப்பட்டுள்ள லூவர்ஸ் சிவருடன் பொருந்தாதன் காரணமாக சிலிகன் பசையிட்டு பொறுத்தி இருந்தமையால் யன்னல் உரிய நியமத்திற்கு முறையாக பொருத்தியிருக்கவில்லை.

(இ) இரண்டு மூடிகளுடனான அலுமினியம் கதவுக்காக ரூபா 67,645 மதிப்பிடப்பட்டிருந்ததுடன், வலதுபுர கதவு மூடியின் ஹென்டில் (கைப்பிடி) உரிய முறையில் பொருத்தப்படாததனால், கதவு சிவருடன் பொருந்தியிருக்கவில்லை.

(ஈ) யன்னல் இருபக்க லூவர்ஸ் மற்றும் கதவு இருபக்க லூவர்ஸ்கலிற்காக ரூபா 50,802 மதிப்பிடப்பட்டு யன்னலின் இருபக்கமும் லூவர்ஸ் இடப்பட்ட போதும், கதவின் ஒரு அடி உயரித்துக்கு மற்றும் 4 அடி அகளத்திற்கு மாத்திரம் லூவர்ஸ் இடப்பட்டிருந்தன.

## 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### (அ) எந்தூரியம் பயிர் செய்கைக்காக உபகரணங்கள் வழங்கல்

(i) ஜம்புகஹபிட்டிய மண்தண்டாவெல இலக்கம் 15 இல் வசிக்கும் கே.ஜீ.குனவதீ என்பவருக்கு எந்தூரியம் பயிர் செய்கைக்காக 2017 திசெம்பர் 27 திகதி ரூபா 35,000 ஆன உபகரணங்கள் வழங்கப்பட்ட போதும், பயிர் கூடம் நிர்மாணித்திருக்காததுடன் 7 ஜீ.ஐ. குழாய்கள் வீட்டில் குவிக்கப்பட்டிருந்தன. சபையினால் வழங்கப்பட்டிருந்த 50 மலர் தொட்டிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன், பயிர் கூடத்திற்கு பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த கறும் வலை மரக் குற்றி உதவியுடன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) கடுகஸ்தொட்ட பல்லேதலவின்ன ஹபுகஹமுதுன இலக்கம் 48/2 பீ இல் வசிக்கும் தில்ஷிகா சந்திரிக்கா குமாரி என்பவருக்கு எந்தூரியம் பயிர் செய்கைக்காக 2017 திசெம்பர் 26 திகதி ரூபா 30,000 இற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதும், பயிர் கூடத்திற்காக வழங்ககப்பட்ட கறும் வலை மற்றும் 10 ஜீ.ஐ. குழாய்கள் பயன்படுத்தப்படாது வீட்டினுள் இருந்ததுடன் பயிர் நாற்றங்காலுக்காக வழங்கப்பட்டிருந்த 50 மலர் தொட்டிகளில் எந்தூரியம் அல்லாத வேறு வித மலர் நாற்றுகள் நடப்பட்டிருந்தன.

### (ஆ) சுய தொழில் வியாபாரத்திற்காக ஜுகீ தையல் இயந்திரம் வழங்கல்

(i) தொரகமவயில் பீ.ஜீ.இந்திராவதீ என்பவருக்கு பைகள் தைக்கும் வியாபாரத்திற்காக ரூபா 30,000 யிற்கு ஜுகீ தையல் இயந்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அவ் இயந்திரம் பயன்படுத்தாது விளைவற்றதாக நிலவியது.

(ii) ஜம்புகஹபிட்டிய மூனமலே எச். ஏம். புன்சி மெனிகா என்பவரக்கு கால் துடைப்பான் மற்றும் முன் தயார் உடைகளை தைத்து விற்பதற்காக தையல் இயந்திரமொன்று வழங்கப்பட்ட போதும், அவ்வாரான வியாபாரமொன்று செய்யப்படாமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவின விடயங்கள் இடையில், ஒதுக்கீடு மாற்றப்பட்ட பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையில் கனிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** 16 வருமான விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட ரூபா 954,000 ஆன வருமானத்திலிருந்து எவ்வித வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** மதிப்பிடப்பட்ட 11 வருமான விடயங்களில் 7 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை வருமானம் அறவிடப்படாது நிலவின.

**(இ)** 46 செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 35,250,700 ஆன ஒதுக்கீட்டிலிருந்து எவ்வித செலவும் மேற்கொள்ளப்படவில்லை.

**(ஈ)** **28** செலவின விடயங்களில் தேறிய ஒதுக்கீட்டிற்கும் உள்ளவாரான செலவிற்கும் இடையில் 14 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை வீச்சலவான முரன் நிலவியன.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்விற்காக அலுவலகலொருவர் நியமிக்கப்ட்டிருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2014 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்க சீபீசீ/சீஎல்ஜி/1/9/1/4 கொண்ட கடிதம் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நியமிக்கப்பட்ட போதும், மீளாய்வாண்டினுள் 02 குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் | | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | (i) | சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் மெய்மை ஆய்வு செய்யப்படாமை. |
| | | (ii) | சில நிலையான சொத்துக்கள் பயனுள்ள வேலைகளுக்கு பயன்படுத்தப்படாமை. |
| (ஆ) | கணக்கீடு | (i) | சபைக்கு சொந்தமான எல்லா சொத்துக்களையும் இனங்கண்டு கணக்கிடாமை. |
| | | (ii) | எல்லா வருமானங்களையும் இனங்கண்டு கணக்கிடாமை. |
| (இ) | வாகன கட்டுப்பாடு | (i) | சபைக்கு சொந்தமான வருமானம் ஈட்டும் வாகனங்களை பயன்பாட்டிற்கு எடுக்காமை. |
| | | (ii) | சபைக்கு சொந்தமான வாகனங்கள் பாதுகாப்பின்றி சபை வளவில் மற்றும் பல இடங்களில் போடப்பட்டுள்ளமை. |
| (ஈ) | வருமான சேகரிப்பு | (i) | கடையறைகளின் மதிப்பீடு அமுல்படுத்தப்படாமை. |
| | | (ii) | வியாபார அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக முறையான மதிப்பீடொன்று செய்யப்படாமை. |
| | | (iii) | நிலுவை வருமானத்தை அறவிட முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை. |
| (உ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | (i) | வேலைக் கடன்கொடுத்தோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | கடன்பட்டோர் மீதி அறவிடலுக்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஊ) | ஒப்பந்த நிருவாகம் | (i) | நிர்மாணப்பணிகளிற்காக டென்டர் விதிகளை பின்பற்றாமை. |
| | | (ii) | நிர்மாணப்பணிகளில் தாமதம் நிலவுகின்றமை. |